அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 16/93

பொது நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம் - கொழும்பு. 07
1993, ஆகஸ்ட் 06 ஆந் தேதி.

செயலாளர்கள் அனைவருக்கும்.

உதவிச் செயலாளர்கள் (இநிசேவையைச் சேரா தவர்கள்) வேலையாட் பிரதிநிதிகள்.

1979.06.14ஆந் திகதிய 315ஆம் இலக்க, 1979.10.23ஆந் திகதிய 331ஆம் இலக்கத் தாபன சுற்றறிக்கைக் கடிதங்களுக்கும், 1986.06.24ஆந் திகதிய 330ஆம் இலக்க, 1986.07.30ஆந் திகதிய 338ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளுக்கும் உங்கள் அவதானம் ஈர்க்கப்படுகிறது.

02. உதவிச் செயலாளர்கள் (இநிசேவையைச் சேராதவர்கள்) வேலையாட் பிரதிநிதிகள் 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவையுடன் 10 ஆண்டுகள் இப் பதவியில் நிறைவு செய்துள்ளதுடன், இலங்கை நிருவாகச் சேவையின் வகுப்பு 11 தரம் 11க்குரிய அலுவலர்களுக்காக நடாத்தப்படும் 2ஆம் வினைத்திறன் தடைப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருப்பின் அல்லது விலக்குப் பெற்றிருப்பின் அத்திகதியிலிருந்து, அவர்களுக்கு 1987.12.11ஆந் திகதிய 387ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின்படி (ஆர்-6-1) சம்பள அளவுத் திட்டமான ரூபா. 55200-7×2400-ரூ. 72000 ஏற்புடையதாகும்.

03. அவர்கள் 1992.12.24ஆந் திகதிய 37/92ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின்படி 1993.01.01இலிருந்து எஸ்-6-1 சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடையோர் ஆவார்கள்.

ஒப்பம்: எம்.டி.டி.பீரிஸ்.
செயலாளர்,
பொது நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.